வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press Release No: 5** **Date: 31.05.2025**

# V.O. Chidambaranar Port Authority emerges as a model for swift and smart execution of infrastructure projects

V.O. Chidambaranar Port Authority, the economic engine of south India has been making significant strides in cargo handling with the mission to handle 50 Million Tonnes of cargo and 1 Million TEUs of containers this financial year. To achieve this mission, infrastructure development at the port, to cater the needs of the EXIM trade through VOC Port has been happening in a swift manner. Aligning to 'Gati Shakti', initiative of the Hon'ble Prime Minister of India and the Maritime India Vision 2030, of Ministry of Port, Shipping and Waterways, VOC Port has positioned itself as a national exemplar for rapid and efficient project execution, catering to the needs of EXIM trade.

In the last fiscal year, VOC Port enhanced its cargo handling capacity through major infrastructure upgrades, including a new container terminal (Tuticorin International Container Terminal) with a capacity to handled 7 lakh TEUs of Containers in September 2024, bulk cargo terminal (JSW Tuticorin Multipurpose Terminal) with a capacity to handle 7 million Tonnes of cargo, and expanded turning circle and dredging in front of NCB-3 in May 2025. Key developments also include a multipurpose berth at berth-7 in March 2025, link conveyor system to tap the idle capacity in January 2025, and Direct Port Entry facility for Export containers in April 2025. Additionally, the Port marked a green energy milestone by commissioning Green Hydrogen Pilot Plant in May 2025, the first Indian Port to lead the transition to Green Energy. Port has allocated 501 acres for green hydrogen/ammonia projects, attracting ₹41,860 crores in investments.

To serve the emerging industries in the primary hinterland of Tuticorin, to the likes of Vinfast, one of the largest EV car manufacturer, Vikram Solar and Tata Solar, the manufacturers of Solar power panels and accessories, furniture industry in the Furniture park of Tuticorin SIPCOT, windmill blade industry and the probable industries like Ship building, automobile accessory, VOC Port has charted out various capacity augmentation and Ease of Doing Business initiatives to meet their logistics needs.

Plans are underway to strengthen and deepen the inner harbour berths, to a draft of 14.20 metres. The construction of North Cargo Berth-4 with length overall (LOA) of 400 meters shall be used for the proposed Off-shore Wind Terminal, and the development of berth-10 as a multi cargo berth will enhance the Port's general cargo handling capabilities. The Port is also in the process of widening its entrance, and dredging the approach channel to facilitate easy handling of fully loaded Panamax bulk cargo and container vessels. Plans are underway to establish VOC Port as a dedicated shipbuilding and ship repair facility in the east coast, further positioning the Port as a comprehensive maritime hub.

To meet the exponential growth of container traffic, the Port has proposed to develop Outer Harbour, for which the Hon'ble Prime Minister of India, Shri Narendra Modi, has laid the foundation stone. The Outer Harbour shall feature with two container terminals with quay length of 1 Km each, draft of 16.5 metres, with a capacity to handle 4 Million TEUs of container traffic.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson in his message stated, "the remarkable pace of infrastructure project execution at VOC Port is driven by the all-weather ecosystem of Tuticorin, easy availability of the construction materials, good work culture, strategic planning, guidance of Ministry of Ports, Shipping and Waterways and seamless inter-departmental coordination. VOC Port leverages on periodic interaction with stakeholders of the port to assess the augmentation requirements and structured systems for monitoring the progress of projects. The above ecosystem has been a platform for the investors to execute the project with ease in a scheduled manner, contributing to India's maritime growth and sustainability goals."

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Global Connect
Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி :05 நாள்: 31.05.2025

**வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் வளர்ச்சிப் பணித்திட்டங்களை விரைவாக மற்றும் திறமையாக செயல்படுத்துவதில் தேசிய அளவில் ஒரு முன்மாதிரியாக திகழ்கிறது**

தென்னிந்தியாவின் வர்த்தக இயந்திரமாகத் திகழ்கிற வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், இந்த நிதியாண்டில் 50 மில்லியன டன் சரக்குகளையும், 1 மில்லியன் டிஇயு (TEUs) சரக்குபெட்டகங்களையும் கையாளும் இலக்குடன், சரக்கு கையாளுதலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த இலக்கை அடையும் நோக்கத்தில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக தேவைகளை துறைமுகத்தின் மூலம் பூர்த்தி செய்வதற்காக பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை வேகமாக செயல்படுத்தி செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு பாரத பிரதமரின் கதி சக்தி திட்டம் (PM Gati Shakti), கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தின் கடல்சார் இந்தியா தொலைநோக்கு பார்வை 2030 (Maritime India Vision 2030) ஆகிய முயற்சிகளுடன் ஒருங்கிணைந்து துறைமுகம் திட்டங்களை விரைவாக மற்றும் திறமையாக செயல்படுத்துவதில் தேசிய அளவில் தன்னை ஒரு மாதிரியாக நிலை நிறுத்தி வருகிறது. இதன் மூலம் துறைமுகத்தினால் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

கடந்த வருடத்தில் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் முக்கியமான மேம்பாட்டுப் பணித்திட்டங்களை மேற்கொண்டு, தனது சரக்கு கையாளும் திறனை மேம்படுத்தியுள்ளது. அவைகளுள் 2024-ஆம ஆண்டு செப்டம்பர் மாதத்தில், 7 லட்சம் டிஇயு-க்களைக் (TEUs) கையாளும் திறனையுடைய ஒரு புதிய சரக்குபெட்டக முனையத்தை (Tuticorin International Container Terminal) அமைத்தல், 7 மில்லியன் டன் சரக்குகளைக் கையாளும் திறனையுடைய பொது சரக்குகளை கையாளும் முனையத்தை (JSW Tuticorin Multipurpose Terminal) அமைத்தல், 2025-ஆம் ஆண்டு மே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட் உள்துறைமுகத்தில் கப்பல் வரும் சுற்றுவட்ட பாதையினை ஆழப்படுத்தி விரிவாக்கும் பணிகள், வடக்கு சரக்கு தளம்-3 (NCB-3)-ஐ ஆழப்படுத்தும் பணிகள் போன்றவை அடங்கும். மேலும், 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், சரக்குத் தளம்-7-ஐ பலதரப்பட்ட சரக்குகளைக் கையாளும் சரக்கு தளமாக அமைத்தல், 2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், சரக்குத்தளம் பயன்பாடில்லாத நேரங்களில், கப்பல் தளத்தினை பயன்படுத்துவதற்காக அதைத் திறமையாகக் கையாளுவதற்கென்று இணைப்பு கன்வேயர் அமைப்பை நிறுவுதல், 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஏற்றுமதி சரக்குப்பெட்டகங்களுக்காக நேரடி துறைமுக நுழைவு வசதி (Direct Port Entry facility) அமைத்தல் போன்ற திட்டங்களும் துறைமுகத்தின் முக்கிய மேம்பாடுகளில் அடங்கும். மேலும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி தொழில்நுட்ப செயல்முறை ஆலையைத் துவங்கியதின் மூலம் பசுமை ஆற்றல் மாற்றத்தைத் தழுவிய நாட்டின் முதல் இந்திய துறைமுகமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் விளங்குகிறது. துறைமுகம், பசுமை ஹைட்ரஜன் மற்றும் அம்மோனியா திட்டங்களுக்காக 501 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, அதன் மூலம் ரூ.41,860 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளது குறிப்பித்தக்கது.

தூத்துக்குடியின் சுற்றுவட்டாரங்களில் வளர்ந்து வரும் நிறுவனங்களுக்கு சேவை செய்யும் வகையில் மிகப்பெரிய மின்சார வாகன உற்பத்தியாளர்களில் ஒன்றான வின்பாஸ்ட் (Vinfast), சூரிய மின் பலகைகள் (Panels) மற்றும் அதன் உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களான விக்ரம் சோலார் மற்றும் டாடா சோலார், தூத்துக்குடி தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகம் (SIPCOT) மரச்சாமான்கள் பூங்காவில் அமைந்துள்ள மரச்சாமான்கள் தொழிற்சாலை, காற்றாலை இறகு மற்றும் அதன் உதிரிபாகங்கள் தொழிற்சாலை, வரவிருக்கும் கப்பல் கட்டும் தொழில் நிறுவனங்கள் மற்றும் வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் போன்றவைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் பல்வேறு

திறன் மேம்பாட்டு திட்டங்களையும் வர்த்தகத்தை எளிதாக்கும் முயற்சிகளையும் செயல்படுத்தி வருகிறது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் உள்துறைமுக சரக்கு கையாளும் தளங்களை 14.20 மீட்டராக ஆழப்படுத்தி பலப்படுத்தும் திட்டங்கள் நடைபெறவுள்ளன. மேலும், 400 மீட்டர் நீளம் கொண்ட வடக்குசரக்கு தளம் -4-ஐ அமைத்து, அத்தளத்தை தரைதள காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரி பாகங்களை கையாளுவதற்கு வசதியாக அமைக்கப்படவிருக்கும் முனையத்திற்காக பயன்படுத்தப்படுத்துதல் மற்றும் பலதரப்பட்ட சரக்குகளை கையாளுவதற்கு வசதியாக அமைக்கப்படவிருக்கும் சரக்கு தளம் 10 போன்ற திட்டங்கள் அனைத்தும் துறைமுகத்தின் பொது சரக்குகளைக் கையாளும் திறனை அதிகரிக்கும். மேலும் துறைமுகத்தினுள் வரும் பனமாக்ஸ் வகை பெரிய சரக்கு கப்பல்கள் மற்றும் சரக்குபெட்டக கப்பல்களை கையாளுவதற்கு வசதியாக துறைமுக நுழைவு வாயிலை அகலப்படுத்தும் பணி, கப்பல் வரும் வழித்தடத்தினை ஆழப்படுத்தும் பணி ஆகிய பணிகள் நடைபெற உள்ளன. கிழக்கிந்திய கடற்கரையில், ஒரு பிரத்தியேகமான கப்பல் கட்டும் தளம் மற்றும் பழுது பார்த்தல் வசதியைக வ.உ.சிதம்பரனார் துறைமுகப்பகுதியில் ஏற்படுத்தும் பணித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கிழக்கிந்திய துறைமுகங்களுள் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் முழுமையான கடற்சார் வர்த்தக மையமாக திகழும்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் சரக்குபெட்டக போக்குவரத்தின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு வெளிதுறைமுக திட்டத்திற்கு மாண்புமிகு பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார். 4 மில்லியன் டிஇயு (TEU) சரக்குபெட்டகங்களை கையாளும் திறனையுடைய 2 சரக்குப்பெட்டக முனையங்களையுக் கொண்ட இத்திட்டம்,, 1 கிலோ மீட்டர் நீளமும் 16.5 மீட்டர் மிதவை ஆழமும் கொண்டதாக இருக்கும்.

திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் தனது செய்தி குறிப்பில், தூத்துக்குடியின் எல்லா காலநிலைகளையும் தாங்கும் சுற்றுச்சூழல் அமைப்பும், கட்டுமானப் பொருட்கள் எளிதாக கிடைத்தலும், சிறந்த பணி கலாச்சாரமும், சரியான திட்டமிடுதலும், இந்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தின் வழிகாட்டுதலும், துறைமுகத்தினுள் உள்ள துறைகளுக்கு இடையே உள்ள சிறப்பான ஒருங்கிணைப்பும், வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் திட்டங்களை வேகமாக நிறைவேற்றுவதற்கான முக்கிய காரணங்களாக இருக்கின்றன என்று கூறினார். மேலும், துறைமுகம், துறைமுக உபயோகிப்பாளர்களுடன் அவ்வப்போது கலந்துரையாடி, துறைமுக மேம்பாட்டுத் தேவைகளை மதிப்பீடு செய்கிறது என்றும் பணித்திட்டங்களின் வளர்ச்சியினை கண்காணிக்க கட்டமைக்கப்பட்ட அமைப்புகளை (structured systems) துறைமுகம் உருவாக்குகிறது என்றும் கூறினார். மேற்கண்ட இந்த அனைத்து முயற்சிகளும், முதலீட்டாளர்கள் தங்கள் திட்டங்களை எளிதாகவும், திட்டமிட்ட விதமாகவும் செயல்படுத்துவதற்கு ஒரு தளமாக இருந்து வருகிறது. இதன் மூலம் துறைமுகத்தினால் இந்தியாவின் கடல்சார் வர்த்தக வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை இலக்கினை அடைதலுக்கு பங்களிக்க முடியும் என்று அவர் தனது செய்தியில் கூறினார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி